**Latest Notes Tnpsc Group 2&4 Vao =Tet &Pg TRB Exams Tamil Material**

# தமிழ் சமச்சீர் கல்வி புத்தகம்

# ஏழாம் வகுப்பு

## வாழ்த்து

### திரு.வி.க - (1883-1953)

- 'பண்ணினை' - எனத்துவங்கும் பாடலை இயற்றியவர் - திரு.வி.க .
- போற்றி - வாழ்த்துகிறேன் .
- ஊர் - காஞ்சிபுரம் (மா) , துள்ளம் (தற்போது தண்டலம்)
- தொழிலாளர் நலத்திற்கும் , பெண்கள் முன்னேற்த்திற்கும் பாடுபட்டவர் - திரு.வி.க .
- பெற்றோர் - விருத்தாசலனார் , சின்னம்மையார் .
- காலம் - 26.08.1883 - 17.09-1953
  - நூல்கள் -

1. பெண்ணின் பெருமை
2. மனிதவாழ்க்கையும் காந்தியடிகளும்
3. தமிழ்த்தென்றல்
4. உரிமை வேட்கை
5. முருகன் அல்லது அழகு
6. பொதுமை வேட்டல்
7. நாயன்மார் வரலாறு

- பொதுமை வேட்டல் - மொத்த தலைப்பு - 44 (முதல் தலைப்பு - தெய்யவநிச்சயம் , இறுதி தலைப்பு - போற்றி) , பாடல்கள் - 340.
- திரு.வி.க. பணிபுரிந்த பள்ளி - வெஸ்லி பள்ளி , ராயப்பேட்டை , சென்னை .

## செம்மொழித்தமிழ்

- 'எளிதில் பேசவும் , பாடல்கள் இயற்றவும் இயற்கையாக அமைந்துள்ளது , தென்மொழியாகிய தமிழ் ஒன்றே' - என்றவர் - வள்ளலார் .

- ‘தமிழ்மொழி அழகான சித்திர வேலைபாடமைந்த வெள்ளித்தட்டு . அதில் வைக்கப்பட்டிருக்கும் தங்க ஆப்பிள் திருக்குறள் . தமிழ் என்னை ஈர்த்தது . திருக்குறள் என்னை இழுத்தது ’ - என்றவர் - டாக்டர் கிரௌவல் .
- ‘உலகின் மிகப்பழமையான நிலப்பகுதியான குமரிக்கண்டத்திலிருந்து தமிழ் தோன்றியது’ - எனக்கூறும் நூல் - தண்டியலங்காரம் .
- ‘தமிழ் , பிறமொழித்துணையில்லாமல் தனித்து இயங்கவல்லது மற்றும் தழைத்தோங்க வல்லது ’ என்றவர் - கால்டுவெல் .
- ‘எல்லாச்சொற்களும் பொருள் குறித்தனவே’ எனக்கூறும் நூல் - தொல்காப்பியம் .
- தமிழ் மெல்லோசை உடைய மொழி
- தமிழில் இடுகுறிப்பெயர்கள் குறைவு
- ‘கலிப்பா’ வேறுமொழியில் இல்லை
- அம்மை , அப்பன் என்று வழங்கிய நாடு - குமரி நாடு .

## ஊரும் பேரும்

- ‘ஊர்’ எனும் பெயரில் நகரமும் , ‘ஊர் நம்மு’ எனும் பெயரில் ஊரும் உள்ள நாடு - பாபிலோன் .
- அத்தி மரங்கள் சூழ்ந்த ஊர் - ஆர்க்காடு (ஆர் - அத்தி)
- முல்லை நில ஊர் - காட்டூர்
- குறிஞ்சி நில ஊர் - மலையூர் .
- மருத நில ஊர் - மருதூர் .
- நெய்தல் நில ஊர் - கடலூர் .
- தென்னைமரம் சூழ்ந்த ஊர் - தெங்கூர் .
- தெற்கே அமைந்த ஊர் - தென்பழஞ்சி , வடக்கே அமைந்த ஊர் - வடபழஞ்சி .
- நாயக்கர்கள் , தமிழகத்தை 72 பாளையங்களாக பிரித்து ஆண்டனர் .
- 12 வயதிலேயே , மற்போர் , சிலம்பு எனகற்று , புலியை வீழ்த்தியவர் - புலித்தேவன் .

## புறநானூறு

- ‘நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே’ எனப்பாடியவர் - மோசிக்கீரனார் .
- புறம் என்றால் - மரஞ்செய்தலும் அரஞ்செய்தலும் .
- மோசிக்கீரனாருக்கு கவரி வீசிய அரசன் - சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறை .
- தானை - படை , கீரன் - குடிப்பெயர் .

## முதுமொழிக்காஞ்சி

1. ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்
   ஓதலில் சிறந்தன்(று) ஒழுக்கம் உடைமை.
2. காதலில் சிறந்தன்று கண்ணஞ்சப் படுதல்.
3. மேதையில் சிறந்தன்று கற்றது மறவாமை.
4. வண்மையில் சிறந்தன்று வாய்மை யுடைமை.
5. இளமையில் சிறந்தன்று மெய்பிணி இன்மை.
6. நலனுடை மையின் நாணுச் சிறந்தன்று.
7. குலனுடை மையின் கற்புச் சிறந்தன்று.
8. கற்றலின் கற்றாரை வழிபடுதல் சிறந்தன்று.
9. செற்றாரைச் செறுத்தலில் தற்செய்கை சிறந்தன்று.
10. முன்பெரு கலின்பின் சிறுகாமை சிறந்தன்று.

- ஆசிரியர் - கூடலூர்க்கிழார் .(ஐங்குறுநூறைத்தொகுத்தவர்)
- இந்நூலின் வேறுபெயர் - அறவுரைக்கோவை
- ‘சிறந்த பத்தை தன்னகத்தே கொண்ட நூலின் பெயர்’ - முதுமொழிக்காஞ்சி .
- இந்நூல் காஞ்சித்திணையில் ஒன்று . 10 அதிகாரம் மற்றும் 100 பாடல்களை கொண்டது .
- ‘உலக உண்மைகளைத் தெளிவாக எடுத்தியம்பும் நூல்’ - முதுமொழிக்காஞ்சி .
- ஆர்கலி - நிறைந்த ஓசையை உடைய கடல் . பேதை -அறிவுநுட்பம் .

- ‘தமிழ்ப்படித்தால் அறம்பெருகும்’ என்றவர் - பெருஞ்சித்திரனார் .

## மீனாட்சி சுந்தரனார்

- பிறந்த ஊர் - திரிசுரபுரம் (திருச்சி) அருகே எண்ணெய் கிராமம் .
- ஆண்டு - 06.04.1815 - 01.02.1876
- பெற்றோர் - சிதம்பரம் , அன்னத்தாச்சியார் .
- இவரின் மாணவர்கள் - குலாம் காதர் நாவலர் , சாமிநாதன் , சவரிராயலு , தியாகராசர் .
- தலபுராணங்கள் பாடுவதில் வல்லவர் - மீனாட்சி சுந்தரனார் .
- இவர் சிலகாலம் திருவாவடுதுறை ஆதினமாக பணியாற்றினார் .
- ‘நோய்க்கு மருந்து இலக்கியம் என்றவர் ’ - மீனாட்சி சுந்தரனார் .

## கோவூர்க்கிழார்

- பிறந்த ஊர் - உறையூர் (நலங்கிள்ளியின் தலைநகரம்)
- இவர் , நலங்கிள்ளியின் அவைத்தலைவர் .
- குளமுற்றத்துஞ்சிய கிள்ளிவளவனின் தலைநகரம் - புகார் .
- சோழனின் மாலை - அத்தி , பாண்டியனின் மாலை - வேப்பம்பூ , சேரனின் மாலை - பனம்பூ .
- மலையமான் திருமுடிக்காரியின் பிள்ளைகளை , கிள்ளிவளவனிடமிருந்து காப்பாற்றியவர் - கோவூர்க்கிழார் .
- 'இளந்தத்தனார் எனும் புலவரை மீட்டச்செம்மல்' - கோவூர்க்கிழார் .
- 'குறள்நெறிக்கதைகளின் ஆசிரியர்' - கே.சுந்தராஜன் .

## உயிர்மெய் , ஆய்தம்

- ஆய்த எழுத்தின் வேறுபெயர்கள் - அஃகேனம் , முற்றுப்புள்ளி , முப்பாற்புள்ளி , தனிநிலை .
- 'பாடிவீடுகள்' என்பவை , போரின்போது புறப்பட்ட படையினர் , தங்கி இளைப்பாற.
- என்றும் புகழ் சேர்ப்பது - புலனடக்கம் . அமரருள் உய்ப்பது - அடக்கம் .

## திரிகடுகம்

- ஆசிரியர் - நல்லாதனார்
- ஊர் - திருநெல்வேலி மாவட்டம் திருத்து எனும் கிராமம் .
- 'பால் பற்றி சார்பு' என்பதன் பொருள் - ஒரு பக்க சார்பு
- தூஉயம் - தூய்மை உடையோர் , தூறு - புதர் .
- 'தான் வழங்கும் நாட்டில் பயிலும் மற்றைய மொழிகளின் உதவியின்றி தனித்து இயங்கவல்ல மொழியே தனிமொழி' - என்று கூறியவர் - பரிதிமாற்கலைஞர் .
- 'திருந்திய பண்பும் , சீர்த்த நாகரிகமும் , பொருந்திய தூயமொழியே செம்மொழி' என்றவர் - பரிதிமாற்கலைஞர் .

## கணிதமேதை ராமானுஜம்

- பிறந்த ஊர் - ஈரோடு
- காலம் - 22.12.1887 - 26.04.1920
- பெற்றோர் - சீனிவாசன் , கோமளம்
- 1880-ல் லண்டனில் 15 வயதிலேயே கணிதத்தில் சிறந்து விளங்கியவர் - கார் .

- 'தன் கணித தேற்றங்களை , யார்மூலம் கேள்விகளாக தொகுத்து , இந்திய கணித கழக பத்திரிக்கைக்கு ராமானுஜர் அனுப்பினார் ?' - பிரான்சிஸ் ஸ்ப்ரிங் .
- ராமானுஜரின் கட்டுரைகள் 'பெர்னௌலிஸ் எண்கள்' என்ற தலைப்பில் வெளியானது .
- ராமானுஜர் மேற்கல்வி பெற , உதவிக்கு கடிதம் அனுப்பியது ஹார்டி என்பவருக்கு . இதற்கு ராமானுஜத்திற்கு உதவியவர் - E.H. நெவில் .
- ராமானுஜர் இங்கிலாந்து புறப்பட்ட தேதி - 17.03.1914
- 'ஆய்லராக இல்லாவிட்டாலும் , ராமானுஜர் குறைந்த பட்சம் ஒரு ஜகோபி' என்றவர் - லிட்டில்வுட் . (ஆய்லர் - சுவிஸ் நாட்டு கணித மேதை . ஜகோபி - ஜெர்மன் நாட்டு கணிதமேதை )
- 'கணிதத்திறமையால் , விஞ்ஞான உலகை பிரமிக்கச்செய்து , வரலாற்றில் ஒரு குறிப்பிடத்த்கக இடத்தைப்பெற்ற ஒரு பிறவிக்கணிதமேதை ராமானுஜர்' என்றவர் - இந்திராகாந்தி
- 'ராமானுஜர் ஒரு முதல் தர கணிதமேதை ' என்றவர் - ஆளுநர் லார்ட் மென்ட் .
- '20-ம் நூற்றாண்டின் மிகப்பெரிய கணிதமேதை ராமானுஜர்' என்றவர் - சூலியன் .

## ➢ ஹார்டி மற்றும் லிட்டில்வுட்

- கணித இரட்டை மாமேதைகள் என்றழைக்கப்படுபவர்கள் - ஹார்டி , லிட்டில்வுட் .
- 'ரோசர்ஸ் ராமானுஜன் கண்டுபிடிப்புகள்' என்ற நூலை வெளியிட்டவர் - ஹார்டி .
- "இறைவன் தந்த பரிசு ராமானுஜர்" என்றவர் - E.T.பெல் .
- ராமானுஜர் இங்கிலாந்தில் பெற்ற பட்டம் FRS . ஆண்டு 1918 .
- ராமானுஜரின் வெண்கலச்சிலையை இந்தியாவிற்கு அளித்தவர்கள் - ரிச்சர்ட் , ஆஸ்கே (அமெரிக்கா) , 1984 .
- ராமானுஜம் கணித அறிவியல் நிறுவனம் உள்ள இடம் - சென்னை

## நால்வகைச்சொற்கள்

- தனியாக வராமல் , பெயர் மற்றும் வினைச்சொற்களை சார்ந்து வரும் சொற்கள் - இடைச்சொல் .
- செய்யுளுக்கே உரிமை பெற்று வரும் சொற்கள் - உரிச்சொல் .

## இரட்டுற மொழிதல்

- ஆசிரியர் - காளமேகப்புலவர்
- இயற்பெயர் - வரதன்
- ஊர் - கும்பகோணம் (அ) விழுப்புரம் என்ற கருத்து நிலவுகிறது .
- இவர் வைணவத்திலிருந்து சைவ சமயத்திற்கு மாறியவர் .
- திருவரங்க மடப்பள்ளியில் சிறிதுகாலம் வேலைப்பார்த்தவர் .
- ஆடுபரி - ஆடுகின்ற குதிரை ,
- பரிவாய் - அன்பாய் , குதிரையின் வாய்
- துன்னலர் - பகைவர் , அழகிய மலர்
- 'தனிப்பாடல் திரட்டை தொகுத்தவர்' - சந்திரசேகர கவிதாசப்பண்டிதர் . தொகுப்பித்தவர் - ராமநாதபுரம் பொன்னுசாமி .
- 'கற்றது கைம்மண்ணளவு , கல்லாதது உலகளவு' என்று பாடியவர் - ஔவை .

## காந்தியடிகள் கடிதம்

- இக்கடிதம் , 1917 ல் குஜராத்தில் புரோச் எனும் நகரில் நடந்த , இரண்டாம் கல்வி மாநாட்டில் காந்தியடிகள் பேசியதைத் தழுவி , பாடபுத்தகத்தில் எழுதப்பட்டுள்ளது

## சிந்தனைச்செல்வம்

- ஆசிரியர் - திருமுருக கிருபானந்த வாரியார் .

## இடுகுறி , காரணப்பெயர்கள்

- தமிழில் மிகுதியாக உள்ள பெயர்கள் - காரணப்பெயர்கள்
- மரங்கொத்தி - காரண சிறப்புப்பெயர்

## திருவாரூர் நாண்மணிமாலை

- ஆசிரியர் - குமர குருபர்
- பெற்றோர் - சண்முகசிகாமணி கவிராயர் , சிவகாமசுந்தரி .
- வேறுநூல்கள் - நீதிநெறிவிளக்கம் , மீனாட்சியம்மைப்பிள்ளைத்தமிழ் , கந்தர் கலிவெண்பா , முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் , மதுரைக்கலம்பகம் ,
- காலம் - 17ம் நூற்றாண்டு .
- திருவாரூர் நாண்மணிமாலையில் உள்ள மொத்த பாடல்கள் - 40 .
- நாண்மணிமாலை - முத்து,பவளம், மரகதம்,மாணிக்கம் .

- அதேபோல் இந்நூலில் உள்ள நால்வகைப்பா - வெண்பா , ஆசிரியப்பா, கட்டளை கலித்துறை, ஆசிரியவிருத்தம் .
- தென்மலை - தெற்கிலுள்ள திருவாரூர் , பூங்கோயில் - திருவாரூர்க்கோவில் .

## மெய்ப்பொருள் கல்வி

- ஆசிரியர் - வாணிதாசன்
- இயற்பெயர் - எத்திராசலு (அ) அரங்கசாமி .
- பெற்றோர் - திருக்காமு , துளசியம்மாள்
- சிறப்புப்பெயர் - கவிஞரேறு , பாவலர்மணி , தமிழகத்தின் வோர்ட்ஸ்வொர்த்
- ஊர் - புதுவையை அடுத்த வில்லியனூர் .
- காலம் - 22.07.1915 - 07.08.1974
- மெய்ப்பொருள் கல்வி என்பது , இவரின் குழந்தை இலக்கியம் என்ற நூலில் வரும் ஒரு பாடல் ஆகும் .

## தூங்கா நகர்

- தூங்கா நகரம் எனப்படுவது - மதுரை
- தமிழ்நாட்டின் இரண்டாம் பெரிய நகரம் - மதுரை
- தென்னிந்தியாவின் ஏதென்ஸ் என்றழைக்கப்படும் நகரம் - மதுரை
- 'தமிழ்க்கெழு கூடல்' என்று புறநானூறு பாராட்டிய நகரம் - மதுரை
- 'தாங்கரு மரபின் மகிழ்நனை மதுரை ' என்ற நூல் - சிறுபாணாற்றுப்படை
- 'ஆலவாய் என்பது மதுரை' என்ற நூல் - திருவிளையாடற்புராணம்
- மதுரையில் ஆடைகள் விற்கும் பகுதி - அறுவை வீதி
- தானியக்கடை பகுதி - கூலவீதி
- பொற்கதைகள் இருக்கும் வீதி - பொற்வீதி
- மன்னர்கள் வாழும் வீதி - மன்னவர் வீதி
- அந்தணர்கள் வாழும் வீதி - மறையவர் வீதி
- 'சேரநாடு வேழமுடைத்து , சோழநாடு சோறுடைத்து , பாண்டிய நாடு முத்துடைத்து , தொண்டை நாடு - சான்றோர் உடைத்து ' என்பது பழமொழி .
- அரிமர்த்தணப்பாண்டியனிடம் அமைச்சராய் பணியாற்றியவர் - மாணிக்கவாசகர்
- குமரகுருபரர்க்கு , மீனாட்சியம்மையே சிறுபிள்ளையாக வந்து , முத்தமணிமாலை பரிசளித்தது , மதுரையில் .
- மதுரையில் 4-வது தமிழ்ச்சங்கத்தை நிறுவியவர் - பாண்டித்துரை
- திருஞானசம்பந்தர் , கூன்பாண்டியன் காலத்தில் வாழ்ந்தவர் .

- மீனாட்சி கோவிலின் பழமையான கோபுரம் - கிழக்குக்கோபுரம்
- மீ.கோவில் கோபுரங்களில் உயரமானது - தெற்கு கோபுரம் (160.9 அடி , 1511 சுதை உருவம் உள்ளது )
- மரம் பயன்படுத்தாமல் கட்டப்பட்டது - நாயக்கர் மஹால் (தூண்கள் 82 அடி உயரம் , 19 அடி சுற்றளவு)

## கண்ணதாசன்

- ஊர் - சிறுகூடல் பட்டி
- காலம் - 1927 - 1981
- இயற்பெயர் - முத்தையா
- வேறுபெயர் - காரைமுத்துப்புலவர் , வணங்காமுடி , பார்வதிநாதன் , ஆரோக்கியநாதன் , கமகப்பிரியா

## ஏர்முனை

- 'ஏர்முனைக்கு நேரிங்கே எதுவுமில்லை ' எனப்பாடியவர் - மருதகாசி
- திரைக்கவித்திலகம் என அழைக்கபடுபவர் -மருதகாசி
- ஊர் - திருச்சி யில் உள்ள மேலகுடிக்காடு
- பெற்றோர் - அய்யம்பெருமாள் , மிளகாயி அம்மாள் .
- முட்டு என்பதன் பொருள் - குவியல்
- இவரின் காலம் - 13.02.1920 - 29.11.1989

## பொங்கல் வழிபாடு

- ஆசிரியர் - ந பிச்சமூர்த்தி .
- இயற்பெயர் - ந. வேங்கடலிங்கம்
- ஊர் - கும்பகோணம் , தஞ்சை .
- காலம் - 15.08.1900 - 04.12.1976
- இவர் வழக்குரைஞராக பணியாற்றிய காலம் - 1924 -1938 (14 ஆண்டுகள்)
- கோவில் நிர்வாக அலுவலராய் இருந்த காலம் - 1938 -1954 (16 ஆண்டுகள்)
- கனகம் - பொன் , நிவேதனம் - படையமுது , கடுகி - விரைந்து .
- 'பாரதிக்குப்பின் கவிதை மரபில் திருப்பம் விளைவித்தவர்' - ந.பிச்சமூர்த்தி .

## நெசவு

- ‘பூக்களில் சிறந்த பூ , பருத்திப்பூ’ என்றவர் - திரு.வி.க
- பாவுநூல் , ஊடைநூல் இணைந்து உருவாகும் ஆடை - கலிங்கம்
- திருப்பூர் - பின்னலாடை
- மதுரை - சுங்குடிப்புடவை
- உறையூர் - கண்டாங்கி
- காஞ்சி - பட்டு
- சென்னிமலை - போர்வை

## தமிழக முன்னோடிகள்

- கண் , காது , மனம் ,இம்மூன்றிற்கும் இன்பம் பயக்கும் கலை - நாடகக்கலை
- நாடக இலக்கண நூல்கள்

1. சயிந்தம்
2. செயிற்றியம்
3. முறுவல்
4. மதிவாணன் நாடகக்கலை

### பரிதிமாற் கலைஞர் காலம் - (1870 - 1903)

- ‘தமிழகம் உரிமை இழந்து , ஆங்கில மோகத்தில் ஆழ்ந்திருந்த காலத்தில் அருந்தமிழைப் போற்றி வளர்த்தவர் ’ - பரிதிமாற்கலைஞர் .
- பரிதிமாற்கலைஞரின் நாடகங்கள்

1. ரூபாவதி
2. கலாவதி
3. மானவிஜயம் (களவழி நாற்பது எனும் நூலை தழுவி எழுதப்பட்ட நாடகம்)

- செம்மாந்த சீரிய செந்தமிழ்நடையில் நாடகம் இயற்றியவர் - பரிதிமாற்கலைஞர் .
- வடமொழி , மேனாட்டு நாடகமரபுகளை , தமிழ்நாடகத்தோடு இணைந்து எழுதப்பட்ட நாடக இலக்கண நூல் - நாடகவியல் (எழுதியவர் - பரிதிமாற் கலைஞர்).

### சங்கரதாசு சுவாமிகள் காலம் - (1867 - 1920)

- பாமர மக்களுக்குத்தெரிந்த பழங்கதைகளை நாடகமாக்கியவர் - சங்கரதாசு சுவாமிகள்

- சிறுவர்களை வைத்து நாடகக்குழுவை தோற்றுவித்தவர் - சங்கரதாசு

## சங்கரதாசுவின் நாடகங்கள்

1. வள்ளித்திருமணம்
2. கோவலன் சரித்தரம்
3. சதிசுலோசனா
4. இலவகுசா
5. அபிமன்யு
6. சுந்தரி
7. பக்த பிரகலாதா
8. சதிஅனுசுயா
9. பவளக்கொடி
10. நல்லதாங்காள் (இவை உட்பட , மொத்தம் 40 நாடகங்கள்)

- 'துடிப்பிருக்கும் சங்கரதாசு எழுத்தில் எல்லாம் சுவை சொட்டும் சந்தர்யம் தோய்ந்திருக்கும்' என்றவர் - புத்தனேரி சுப்ரமணியம் .

## பம்மல் சம்பந்தனார் வாழ்ந்த காலம் - (1875 - 1964)

- மாபாவி (மா - அலைமகள் , பா - கலைமகள் , வி - மலைமகள்)
- 1891-ல் , தம் 18-வது வயதில் பம்மல் சம்பந்தனார் துவங்கிய சபை - சுகுணவிலாச சபை .
- 'நடிகர்களால் கலைஞர்' என மதிக்கப்பட்டவர் - பம்மல் சம்பந்தனார் .
- 'கட்டுக்குழையாத நாடகக்குழுவை வெற்றிகரமாக நடத்தியவர்' - பம்மல்
- பம்மல் எழுதிய நாடகங்கள் - 94

1. மனோகரா
2. யயாதி
3. சிறுதொண்டன்
4. கர்ணன்
5. சபாபதி
6. பொன்விலங்கு

- ‘கேளிக்கை நாடகம் மூலம் ,நாடக நையாண்டியையும் தமிழ்நாடக உலகுக்கு அறிமுகப்படுத்தியவர் ’ - பம்மல் .
- ஷேக்ஸ்பியரின் நாடகங்களை தமிழில் தழுவி எழுதியவர் - பம்மல் (வாணிபுரத்து வாணிகன் , விரும்பியவிதமே , அமலாதித்யன்)
- ‘சூதினும் சூதானது யாதெனின் சூதினும் சூதே சூதானது’ என்ற குரளை எழுதியவர் - பம்மல் .
- தமிழ்நாடக பேராசிரியர் -பரிதிமாற்கலைஞர்
- தமிழ்நாடகத்தலைமை ஆசிரியர் - சங்கரதாசு சுவாமிகள்
- தமிழ்நாடக உலகின் இமயமலை - சங்கரதாசு சுவாமிகள்
- தமிழ்நாடகத்தந்தை - பம்மல் சம்பந்தனார் .

## மரபுச்சொற்கள்

### தாவரங்கள்

- பிஞ்சு - அவரை , முருங்கை , கத்தரி , வெள்ளரி , கொய்யா,
- மூசு - பலா மூசு , தென்னங்குப்பை , மாவடு

### விலங்குளின் இளமைப்பெயர்கள்

- குருவிக்குஞ்சு , கோழிக்குஞ்சு , எலிக்குஞ்சு
- ஆட்டுக்குட்டி, நாய்க்குட்டி , கழுதைக்குட்டி, பன்றிக்குட்டி , குதிரைக்குட்டி, பூனைக்குட்டி
- மான் கன்று , யானைக்கன்று , எருமைக்கன்று ,
- சிங்கக்குருளை , புலிப்பறழ் , கீரிப்பிள்ளை , அணில்பிள்ளை .

### ஒலிமரபு சொற்கள்

- சேவல் - கூவும்
- காகம் - கரையும்
- கூகை - குழறும்
- கிளி - கொஞ்சும்
- வானம்பாடி- பாடும்
- ஆந்தை - அலறும்
- கோழி - கொக்கரிக்கும்
- குதிரை - கணைக்கும்

- சிங்கம் - முழங்கும்
- பன்றி - உருமும்
- யானை- பிளிறும்
- நரி - ஊளையிடும்

## முக்கூடற் பள்ளு

- மதோன் மத்தர் என்பதன் பொருள் - பெரும்பித்தனாகிய சிவன் .
- முக்கூடல் எனும் ஊரின் வேறுபெயர் - ஆளூர் வடகரைநாடு
- முக்கூடலில் கூடும் ஆறுகள் - தன்பொருனை, சிற்றாறு , கோதண்டராம ஆறு .
- தென்பால் இருக்கும் நாடு - தென்பால் சீவலமங்கைத் தென்கரை நாடு
- முக்கூடற்பள்ளை எழுதியவர் - எண்ணயினாப்புலவர்

### நவரத்தினம்

1. முத்து
2. பவளம்
3. மரகதம்
4. வைடூரியம்
5. மாணிக்கம்
6. புட்பராகம்
7. ரத்தினம்
8. வைரம்
9. கோமேதகம்

## இயற்கை வேளாண்மை

### நில இடைவெளிகள்

1. நெல் - நண்டோட
2. கரும்பு - ஏரோட
3. வாழை - வண்டியோட
4. தென்னை - தேரோட

- பஞ்சகவ்வியம் - கோமேயம் , சாணம் , பால் , தயிர் , நெய் .
- வேளாண்பல்கலைக்கழகம் அமைந்துள்ள இடம் - கோவை
- வேளாண் தொழிற்கூறுகள் - 6

## வேற்றுமை அடைமொழி

- முதல் வேற்றுமை - எழுவாய் வேற்றுமை , 8-ம் வேற்றுமை - விளி வேற்றுமை .
- இரண்டாம் வேற்றுமை உருபு - ஐ
- மூன்றாம் வேற்றுமை உருபு - ஆல் ,ஆன் , ஒடு, ஓடு, உடன்
- நான்காம் வேற்றுமை உருபு - கு
- ஐந்தாம் வேற்றுமை உருபு - இல் , இன்
- ஆறாம் வேற்றுமை உருபு - அது
- ஏழாம் வேற்றுமை உருபு - கன் , மேல் , கீழ் , உள்
- தமிழ்ப்பாடநூல் என்பது இனமுள்ள அடைமொழி
- வெண்ணிலவு ,செஞ்ஞாயிறு , உப்பளம் - இனமில்லா இடைமொழி

## தனிப்பாடல்

- ஆசிரியர் -அந்தக்கவி வீரராகவர்
- சீட்டுக்கவி மற்றும் நகைச்சுவையாய் பாடுவதில் வல்லவர் .
- இவரின் வேறு நூல்கள் -

1. சந்திரவாணன் கோவை
2. சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ்
3. சேயூர் கலம்பகம்
4. திருக்கழுகுன்ற புராணம்

- இவரின் பாடல்கள் தனிப்பாடல் திரட்டில் , தொகுக்கப்பட்டுள்ளன .
- தனிப்பாடல் திரட்டில் இருக்கும் பாடல்களின் எண்ணிக்கை - 1113 , பாடியவர்கள் -110 .

### யானையைக்குறிக்கும் வேறுபெயர்கள்

1. களபம் (சந்தனம்)
2. மாதங்கம் (பெருந்தங்கம்)
3. வேழம் (பொன்)
4. பகடு (எருது)
5. கம்பம்மா (கம்புமாவு)

## தமிழகத்தின் அன்னிபெசன்ட்

- ‘பெண்ணிற் பெருந்தக்க யாவுள ’ என பல சாதனைகள் புரிந்தவர் - மூவலூர் ராமாமிர்தம் அம்மையார்.
- அறிஞர் அண்ணா அவர்களால் தமிழகத்தின் அன்னிபெசன்ட் எனப்பாராட்டப்பட்டவவர் - மூவலூர் ராமாமிர்தம் அம்மையார்.
- பிறந்த ஆண்டு - 1883
- தந்தை -கிருஷ்ணசாமி
- கணவர் - சுயம்பு
- முதல் போராட்டம் - 1917 , மயிலாடுதுறையில்
- 1938 ல் , மொழிப்போர் பேரணியில் பங்கேற்று ,உறையூரிலிருந்து சென்னை வரை , 42 நாட்கள் 597 மைல்கள் பயணித்தார் .
- இவரின் பெயரால் தமிழக அரசு , திருமண உதவித்திட்டம் கொண்டுவந்த ஆண்டு - 1989 .
- ‘கதர் அணிந்தவர் உள்ளே வரவேண்டும்’ என்றுதன் வீட்டின் முன் எழுதி தொங்கவிட்டவர் - மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் .

## அம்மானை

- அம்மானை என்பது , பெண்கள் விளையாடுவது . ஒரு காய் விளையாட்டு .
- ‘திருச்செந்திற் கலம்பகம்’ எனும் நூலின் ஆசிரியர் - சுவாமிநாத தேசிகர் (அ) ஈசான தேசிகர் .
- இவரின் தந்தை - தாண்டவ மூர்த்தி , ஆசிரியர் - மயிலேறும் பெருமாள்
- இவருடைய குரு - திருவாவாடுதுறை அம்பலவாண தேசிகர்
- நான்முகனை சிறையிலிட்டவர் - முருகன்
- வரை- மலை , முழவு - முத்தளம் , மதுகரம் - தேன் உண்ணும் வண்டு

## தமிழக விளையாட்டுகள்

- பழமைவாய்ந்த ஆடவர் விளையாட்டுகள்

1. மற்போரிடல்
2. ஏறுதழுவுதல்
3. வேட்டையாடுதல்
4. மூழ்கி மணல் எடுத்தல்

- முல்லைநில விளையாட்டு - ஏறுதழுவுதல்

- தமுக்கம் (யானைப்போர் காண்பதற்கான திடல்) மணடபத்தைக்கட்டியவர் - திருமலை நாயக்கர் .
- தமிழரின் தற்காப்புக் கலை - சிலம்பாட்டம்

## பகு , பகாப்பதம்

- ஒரெழுத்து ஒருமொழி மொத்தம் - 42 (எகா - பை ,தீ, தா, ஈ,)
- பகாபதம் எ.கா - மண் , கல் , நீர் , சொல்

➢ பகாப்பதம் இருவகைப்படும் -

1. பெயர் பகாப்பதம்
2. வினைப்பகாபதம்

➢ பகுபத உறுப்புகள் - 6

1. பகுதி
2. விகுதி
3. சந்தி
4. சாரியை
5. இடைநிலை
6. விகாரம்

➢ தொடர் , 4 வகைப்படும்

1. செய்தித்தொடர்
2. வினாத்தொடர்
3. கட்டளைத்தொடர்
4. உணர்ச்சித்தொடர்

- ‘வலக்கை கொடுப்பது , இடக்கைக்கு தெரிய்ககூடாது என வாழ்ந்தவர் ’ - மு.வ .
- ‘இயல்வது கரவேல் , ஈவேது விலக்கேல்’ - ஔவை .

## உழவின் சிறப்பு

- ஆசிரியர் - கம்பர்
- தந்தை - ஆதித்தன்
- நூல்கள் - கம்பராமாயணம் , ஏரெழுபது , சிலையெழுபது , சரஸ்வதி அந்தாதி , திருக்கை வழக்கம் .
- மேழி - கலப்பை , ஆழி - மோதிரம் , காரளார் - மேகத்தை ஆழ்பவர் ,

## ஓவியக்கலை

- தமிழர் வளர்த்த நுண்கலையின் வரிசையில் முதலில் இருப்பது - ஓவியக்கலை
- தமிழ்நாட்டில் 25 , க்கும் மேற்பட்ட குகை ஓவியங்கள் உள்ளன .
- சங்க காலத்துக்கு முன்னால் வாழ்ந்த மக்கள் , ஓவியத்தை 'கண்ணெழுத்து' என்று அழைத்தனர் .
- 'எழுத்து' - ஓவியம் (பரிபாடல் , குறுந்தொகை)
- நடுகல் வணக்கம் பற்றி கூறும் நூல் - தொல்காப்பியம்

### ஓவியத்தின் வேறுபெயர்கள்

1. ஓவு
2. ஓவம்
3. சித்திரம்
4. படம்
5. படாம்
6. வட்டிகைச்செய்தி

### ஓவியரின் வேறுபெயர்கள்

1. கண்ணுள் வினைஞர்
2. சித்திரக்காரர்
3. வித்தக வினைஞர்
4. வித்தகர்
5. கிளவி வல்லோன்

- 'நோக்கினார் கண்ணிடத்தே தம் தொழில் நிறுத்துவார்' - நச்சிரனார்க்கினியர் .
- ஆண் ஓவியர் - சித்திராங்கதன் , பெண் ஓவியர் - சித்திரசேனா என்றும் அழைக்கப்பட்டனர்.

- இறைநடனம் புரியும் இடம் -சித்திரசபை
- நாடகமேடையில் இருக்கும் திரைச்சீலையின் ஓவியத்தை - ஓவிய எழினி என்பர்
- ' சித்திரக்காரப்புலி ' என்றழைக்கப்படுபவர் - மகேந்திரவர்மன் .
- மகேந்திரவர்மன் , உரை எழுதிய ஓவியநூல் - தட்சிண சித்திரம்
- சித்தன்ன வாசல் ஓவியங்களை வரைந்தவர் - இளம்கௌதமன் .

tnpsctamilnadu.weebly.com